உ

குமரன் துணை.



# பரங்கிரிப்பதிகம்.

இஃது

சின்னமனூர்மகா-ா-ா-ஸ்ரீ குத்தாலலிங்கம்பிள்ளையவர்களின்

குமாரரான போடிநாயக்கனூர் ஜோதிடம் மகா-ா-ா-ஸ்ரீ

**வெள்ளையாண்டி பிள்ளையவர்களால்**

இயற்றப்பட்டு

போடிநாயக்கனூர் ஜமீன்தாரணி மகா-ா-ா-ஸ்ரீ

**காமுலம்மாளவர்களின்**

கருணை வாய்ந்த உத்தரவின்மேல்

ஷை ஜமீன்மானேஜர் மகா-ா-ா-ஸ்ரீ

**H. S. ரஹமத்துல்லா சாஹிப் அவர்களின்**

பொருளுதவியால்

ஷை யூர்

ஹக்கீம் பிரஸ் என்னும் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1916

[அணா 2

உ

குமரன் துணை.



# பரங்கிரிப்பதிகம்.

இஃது

சின்னமனூர் மகா-௱-௱-ஸ்ரீ குத்தாலலிங்கம்பிள்ளையவர்களின்
குமாரரான போடிநாயக்கனூர் ஜோதிடம் மகா-௱-௱-ஸ்ரீ
வெள்ளையாண்டி பிள்ளையவர்களால்
இயற்றப்பட்டு

போடிநாயக்கனூர் ஜமீன்தாரணி மகா-௱-௱-ஸ்ரீ
காமுலம்மாளவர்களின்
கருணை வாய்ந்த உத்தரவின்மேல்

ஷை ஜமீன்மானேஜர் மகா-௱-௱-ஸ்ரீ.
**H. S. ரஹமத்துல்லா சாஹிப் அவர்களின்**
பொருளுதவியால்

ஷை யூர்
ஹக்கீம் பிரஸ் என்னும் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

**1916**

இதன் விலை] FIRST EDITION [அணா 2
500

# முகவுரை

பூமீதேவிக்குத்திலகம்போலவிளங்கும் இப்பரதகண்டத்தின் தக்ஷணபாகத்தில் தொன்றுதொட்டு வழங்கிவருவதும் ஆலவாயமர் அவிர்சடைப் பெருமானுர் அகத்தியருக்கன் போடுதவியதுமான தமிழ்ப்பாஷை மற்றேனையபாஷைகளினும் சொற்சுவை, பொருட்சுவை மிக்கதென்பதும், மேன்பாடுற்றதென்பதும், யாரே அறியாதார்· அப்பாஷையின் ஐந்திலக்கணங்களையும் ஒருங்குணர்ந்து புவிராஜரும் புனைந்துபோற்றப் புகழ்பெற்றிருந்தனர் பலர்என்பதும், நாம் அறியாததன்றே. அத்தகைய பாஷையைத் கற்போது பலர் அசட்டைசெய்கின்றனரெனினும் ஆதரித்துமகிழ்வாரும் சிலர் உளர்என்பது திண்ணம்·நமது தாய்பாஷையாகிய அத்தமிழ்மொழியின் சுவையையும், மகிமையையும், கடவுளைநம்பினோர் கைவிடப்படாரெனும் ஆன்றோர் வாக்கின் உறுதியையும், யாவரும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல நன்குஉய்த்துணர்வான் எண்ணிக் காசை நகர்வாசியும் சின்னமனூர் குத்தாலலிங்கம்பிள்ளையவர்களின் அருந்தவப் புதல்வருமான வித்வான் மகா ா-ா-ஸ்ரீ சோதிட வெள்ளையாண்டிபிள்ளையவர்கள் சொன்னயம் பொருணயந்துன்ன அவர் தம்மனத்தெழுந்தபக்திப்பெருக்கின் மேலீட்டால் பரங்கிரிக்குமரன் பதமலர்போற்றி இப்பதிகம் இயற்றினர் இஃது முருகனருளைத் தாவல்லதென்னில் இதன் பெருமையிற்றெனக்கூறுதல் வேண்டுமோ.

இதனை, போடிநாயக்கனூர் ஜமீன்தாரணியாரும் விற்பனமாது சிரோமணியாருமான ஸ்ரீமதி காமுலம்மாளவர்கள், படிக்கக் கேட்டு அளவற்ற உவப்பெய்திக்கருணையோடும் செய்த உத்திரவுகொண்டு ஷை ஜமீன் மானேஜரும் கல்விக்களஞ்சியமும் கருணைவள்ளலுமாகிய மகா ா-ா ஸ்ரீ **H. S.** ரஹமத்துல்லாசாஹீப் அவர்கள் மிக்க பொருட்செலவின்பேரில் அச்சியற்றி யாவருக்கும் பயன்படும்படி செய்து பெரும்புகழ் அடைந்தனர்· சுபம்.

இங்ஙனம்

கு. பா. பாரதி.

இவை

போடிநாயக்கனூர் வித்வான்

## K. பாலசுப்ரமண்யபாரதியவர்கள்

இயற்றியன.

மாவனச ரசமான விழிகடம தினமெனவே
வண்டர் நாடும்
பூவனச ரசமான வளைவேட்டு மரமான
புத்தேள் வண்மைத்
தூவன்ச ரசமான பாங்கிரியி லுறைகுமரன்
றுணைத்தா ளுன்னிப்
பாவனச ரசமானப் பதிகமொன்று புலவர்கொளப்
பகர்ந்தான் மன்னே 1

இப்பதிக மமுதமென வியற்றியருட் பேறெய்தி
யிலங்குஞ் சீலன்
எப்பதிய னெக்குலத்த னெவனென்னி லினிதுறையா
னியம்பக் கேண்மோ
உப்பதிக மலியளக்க ருடுத்தநெடு நிலத்திலுயர்
வொப்பில் லாமே
அப்பதிகழ் காசைநகர் புரிந்தவருந் தவத்துவந்த
வறிவின் மிக்கோன் (2)
கனகமலைக் குமரிக்கு மாண்புமிகு மெழில்வாய்ந்த
கரிய வங்கோ
கனகமலைக் குமரிக்கு முடிதனங்க ளுமடவார்
காத லாமோ
கனகமலைக் குமரிக்கு நிகர்பகைவர் தமைவென்றோன்
காணி யப்பே

களகமலைக் குமரிக்கு மருங்கொடையான் சேனை சூலக்
கண்ய மேலோன் (3)

மாதிடத்தி லிருப்பவனை மறவாத திருவாயன்
வருமெஞ் ஞானச்
சாதிடத்தி லிதயமிக நெக்குருகி யன்புகொளுந்
தன்மை யான்ம
காதிடத்தி லிலகுதவ விரதனருஞ் செந்தமிழிற்
கணித முன்னுஞ்
சோதிடத்தி லிணையில்லான் வெள்ளையாண் டிக்குரிசிற்
சுமுகன் மாதோ (4)

—(*)—

இஃது

போடிநாயக்கனூர் சைவ சித்தாந்த சபை அக்ரா
சனாதிபதியாகிய சின்னமனூர் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ

# கு. அண்ணாமலைப் பிள்ளையவர்கள்

இயற்றியது.

நவ்விவிழி யார்க்குமதன் வெள்ளையாண் டிக்கவிஞ
னவின்ற பத்திக்
கவ்வியநற் றுதிவாய்ந்த சுப்ரமண்யப் பதிகநிதங்
கருதி லம்மா
எவ்வுயிருங் கலந்துநின்ற பரம்பொருடான் மிகப்பேணி
யிரங்கிக் கேட்டுத்
திவ்வியமா வாமுழுதுங் கொடுத்தருளைத் தந்துகதி
சேர்க்குந் தானே

—(*)—

இஃது

பேரையூர் சமஸ்தான வித்வான் அஷ்டாவதானி

மகா-ா-ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரக்கவிராயரவர்கள்

இயற்றியது

விருப்பதிக முற்றிறைஞ்சு பழவடியார் வினையகற்று
மேலோ னென்று
மருப்பதிகஞ் சம்பையிலுந் தடந்துன்றுபரங்குன்ற
மான தெய்வப்
பொருப்பதிக வாமுருகன் மீதுவெள்ளை யாண்டியெனும்
புனிதன் சொற்ற
திருப்பதிக மெனப்பதிக முரைக்கமலைப் புடையனகத்
தியனு னேனே

இவை

போடிநாயக்னூர் வித்வான்

குலசேகரம் ஆச்சாரியாரின் பிரதமமாணுக்கரும்

முத்தாச்சாரியார் குமாரருமான

முத்துச்சுருளியாச்சாரியாரவர்கள்

இயற்றியன

சுகத்தினுமிக் கினியமொழிக் குறவனிதைக் களபமுலைத்
தோயுந் தோளா
னகத்தியனுக் குபதேச சற்குருவா கியகுமா
னடிக ணச்சி

யிகத்தினுமப் பரத்தினுமெற் கிசைந்தபொரு ளுதவுகவென்
றிறைஞ்சி யேத்திச்
செகத்தினுநன் னுவலரும் புகழ்சரிதப் பதிகமொன்று
செப்பினா னால் (1)

போதிடமாய் வதிவிதிமுன் விதித்தவிதி யறியாதிப்
புவியோர் நாளுந்
தீதிடருற் றயர்ந்துவரு மவ்வவருற் பவவினையைத்
தெளிந்தன் னோர்க்கு
மாதிடமா யிதுதவறா தெனமறையின் முறையாக
வழுத்துங் கியான
சோதிடமே தாவியவிற் பனவெள்ளை யாண்டியெனுஞ்
சுமுக னம்மா (2)

# பரங்கிரிப்பதிகம்.

உ

ஓம்

சரஹணபவாயநம:

காப்பு

மங்களகீ தம்பெருகு வாசப் பரங்கிரிவாழ்
துங்கமுரு கன்பதிகஞ் சொல்லவே——சங்கரனும்
அஞ்சரனே ருந்துணைக்க ணம்பிகையு மீன்றமதக்
குஞ்சரனே ருந்துணையா கும்

## பதிகம்—நூல்

ஆசிரியவிருத்தம்.

சீருலவு புவியின்மிசை வருசரா சரமெனுஞ்
சிவபே தங்க டம்மிற்
செப்புமுயர் திணையில்வரு மொப்பற்ற மானிடத்
தேசமது வாய்ந்து மற்றும்
பாருலவு செவிடூமை பேடுமுட மாதியாம்
பற்பலூ னங்க ணீக்கிப்
பகரறிவு கல்விபொறை தயவுசான் ரேருடன்
பழகல்சன் மார்க்க மெய்த

ஏருலவு நல்லருட் டேனொழுகு நினதுமல
ரிணையடித் யான மன்றி
இம்மைமறு மைக்குறுதி வேறில்லை யெனுமுண்மை
யேழையே னுணர வருள்வாய்
தேருலவ நடவுமா லயணமரர் பணிதருந்
திகழொளி பவாய நமவோம்
திருப்பரங் குன்றிலுறை தேசிகா மெஞ்ஞான
சிவசுப்ர மண்ய தேவே (1)

இகபரமி ரண்டினுக் காதார வஸ்துவே
யெனதுவிண் ணப்ப மதுகேள்
இன்பதுன் பங்களைச் சந்ததந் தருகின்ற
விருவினைச் சார்பி லேதோ
பகவசங் கற்பமாய் வருமென்ற னூழின்
பரார்த்திவப் படிய தாகப்
பகரரிய வானந்த பைங்குனி பதினேழு
பரிதிநா ளுதய முதலாய்ச்
செசமதி லகம்பாவ மிகவேபு ரிந்திட்ட
தீவினைத் தொடர்பி னாலோ
செற்மேக நீரினு லோவலத் தாண்மிசை
திரண்டவொரு கட்டி தோன்றித்
திசழுமதி பன்னிரண் டாகியுஞ் சிறிதுமே
தீர்ந்திலது தீர்த்த ருளுவாய்
திருப்பரங் குன்றிலுறை தேசிகா மெஞ்ஞான
சிவசுப்ர மண்ய தேவே (2)

வான்மீன்கள் கோடியொரு மித்தாலு மிலகுகலை
வளர்மதிக் கொப்பா குமோ

மலைகள்பல கூடினுந் தேவரா லயமெனு
மகாமேரு முன்னிற் குமோ
வான்பெரு குளங்கேணி பலகோடி சேரினும்
வாருதிக் குவமை யாமோ
வஞ்சனைகள் பில்லியுட னேவல்கண் ணேறுனது
வடிவேலி னெதிர்நிற் குமோ
நான்செயு மகம்பாவ மெவ்வள விருந்தாலு
நமதடிமை யெனநினைந்தே
நாற்கோண முக்கோண வறுகோண வெண்கோண
நடுவிலுறை சோதி வடிவே
தேன்மாரி பொழியுந் திருக்கருணை வெள்ளமே
சிறியேனை யாள வருவாய்
திருப்பரங் குன்றிலுறை தேசிகா மெஞ்ஞான
சிவசுப்ர மண்ய தேவே (3)

தந்தைதாய் குருதெய்வ நீயலது வேறென்று
தமியேனினைக்க விலையே
தாய்பெற்ற பிள்ளையிற் பொல்லாத சேயெனிற்
றள்ளிடுத னீதி முறையோ
சொந்தமென வாதரவு செய்யாதி ருப்பதுன்
சுயபுத்தி சொற்புத் தியோ
தூண்டுவோர் யாரேனு மில்லையோ வுண்டெனிற்
றுளைகளிரு செவியி லிலையோ
எந்தநே ரமுமுனது பாதவன சங்களை
யிறைஞ்சிமுறை யிட்டு நெஞ்சம்
இரங்காத தென்கொலோ நின்மனது கல்லோ
விளக்குமி லிரும்பு தானோ

சிந்தைவெளி வற்றுமிக வாடுதென் பாதவனி
நீர்த்தாகற் கருணை புரிவாய்
திருப்பரங் குன்றினுறை தேசிகா மெஞ்ஞான
சிவசுப்ர மண்ய தேவே. (4)

எந்தனா ளுன்கருணை வந்துவினை மாற்றுமென்
றேங்குதென் னெஞ்ச மையோ
என்னென்று சொல்லுவே னின்னடிமை யல்லவோ
விக்கொடுமை செய்வ தழகோ
சொந்தமா யாண்டநின் னடியரொடு சேர்த்துமே
சுகமயம தாக்க வேண்டும்
சுயபிர்ம வடிவமாய் நித்தியநி ராலம்ப
சுத்தசன் மார்க்க நிலையாய்ப்
பந்தமற வெங்கணு நிறைந்தவொரு சோதியே
பழமறை வணங்கு முகலே
பரமான தற்பரா னந்ததுரி யத்தினிலை
பாலனுக் கருள்பு ரிகுவாய்
சிந்தைமற வாதபே ரறிவினுக் கறிவான
தெய்வமே தேவ தருவே
திருப்பரங் குன்றினுறை கேசிகா மெஞ்ஞான
சிவசுப்ர மண்ய தேவே (5)

தந்தைகுரு வாகியுப தேசித்து மலையமுனி
தனையடிமை கொண்ட திடமோ
சாதுக்க ளுனதாறு படைவீடு தோறுமுன்
சரணினுறை தருபெ ருமையோ
விந்தைபெறு தேவர்கோன் மருகனெனு மமதையோ
வேண்மகிமை கொண்ட வரமோ.

வீராதி வீரமிகு சூரரைவ தைத்துமே
வெற்றிபெறு கர்வ மதுவோ
சந்ததமு னைப்பரவு மெளியேனை யாளநெஞ்
சத்திலருண் மேவா ததென்
தழையிட்டு முகிலினைச் செண்டினுன் மேருவைத்
தாக்குமயி லதிப னேயென்
சிந்தைகுடி கொண்டவெள ரற்புதமெய் ரூபமே
சேவலங் கொடியு யர்த்தித்
திருப்பரங் குன்றினுறை தேசிகா மெஞ்ஞான
சிவசுப்ர மண்ய தேவே (6)

அத்துவித மாயோக தத்துவமு ரைத்தவே
தாந்தசித் தாந்த நூலின்
அமைவாகி யீசனது குருவாகி யமாருக்
சமூதமா யகில முழுதும்
சத்துசித் தானந்த மயமாகு நினதினிய
சரோருக பதத்தி லன்பாய்
ச்ரஹண பவாவென்று நாடோறு மறவாது
சடாசஷ்ரந் தனைநி னைந்தே
வத்துதா ரணையுற்ற பக்தரித யக்குரிய
வஸ்துவா யிலகு நின்பால்
வரமனைத் தும்பெறக் கருதியே யவரவர்
வருந்தியது வத்தி னளவே
சித்திமுடி வாயுதவு முத்திமுத லேயெனது
தீவினைய கற்ற வருவாய்
திருப்பரங் குன்றினுறை தேசிகா மெஞ்ஞான
சிவசுப்ர மண்ய தேவே (7)

நம்பினவ ரைக்காப்ப தேபெருந் தன்மையென்ன
நான்மறைக ளோதவிலையோ
நடுநிலைமை குடியருமை தெரியாத தென்கொலோ
நானுனது பிள்ளை யலவோ

இன்பசுக வாரியே நினதுசெய லறியாத
வேழைக்கி ரங்கி யருள்வாய்
இவ்வுலக மீதினனி யாவல்கொண் டேனினிய
வினையடிப் போதை நாடும்
அன்பருள மேவியருள் புரிகின்ற தெய்வநீ
யல்லவோ வஃது பொய்யோ
அற்புதப் பிரகாச ரூபமே தேவர்க்கு
மறிவதற் கரிய பொருளே
தென்பொதிகை முனிதனது குருவெனத் துதிசெயுஞ்
சின்மயவி லாச வொளியே
திருப்பரங் குன்றிலுறை தேசிகா பெஞ்ஞான
சிவசுப்ர மண்ய தேவே (8)

கனியே கனிந்தொழுகு ரசமே யினித்தகற்
கண்டே கசிந்த பாகே
காயசித் தியினரொடு யோகசித் தியினருங்
காணரிய மோன முதலே
முனியே சிவானந்த மாயிலகு தெய்வமே
முகிற்சுழலி னழகு காட்டி
மோகஞ்செய் மின்னார்கள் வலையினிற் சிக்காத
முத்தரித யத்து வாழும்
தனியே வரோதய புராதன பராபரநி
சானந்த நித்ய வடிவே

சந்தமிகு நீட்டணி மாங்ப்னே யின்னமொரு
தாய்வயிற் றிடைய டைந்தே
சேனியா திருக்சவுன் பதமலர் துதிக்கநற்
றிருவருள் சுரப்ப வருவாய்
திருப்பரங் குன்றிலுறை தேசிகா மெஞ்ஞான
சிவசுப்ர மண்ய தேவே (9)

தன்மயம தாகவே காணுமிட மெங்கணுஞ்
சஞ்சரிக் கின்ற பொருளே
தற்பரசு கானந்த நிஷ்களநி ராமய
தயாகர தியான வமுதே
பொன்மயத் திடமே பரணடவ நோய்க்குப்
பொலிந்திலகு நன்ம ருந்தே
புண்ணியரு ளத்தையொரு போது மகலாதவா
புண்சலி யகற்ற வருவாய்
உன்மயம தாகவள ருலகுதனின் மாறுத
வுனதடிமை வெள்ளை யாண்டி
ஓதபதி கத்தமிழி லேது பிழை காணினு
முவந்துகொண் டருள்பு ரிகுவாய்
சின்மய சொரூபமே யேகபரி பூரண
சிவாகம புராண முதலே
திருப்பரங் குன்றிலுறை தேசிகா மெஞ்ஞான
சிவசுப்ர மண்ய தேவே (10)

பரங்கிரிப்பதிகம், முற்றிற்று

குகன்றாட்டுணை கடுணை

இவை

சின்னமனூர் வித்வான் மகா-௱-௱-ஸ்ரீ

# வெங்கட நரசிம்மய்யரவர்களியற்றியது.

---

அம்பதிகம் பூமுடித்த வாயகெடும் பணிபணிந்த
வாணா மெங்கள்
சம்பதிக மகமகிழச் சற்குருவாய்ப் பிரணவத்தின்
சாரஞ் சாற்றித்
தம்பதிக ளாறினுள்ளுந் தலைமைபெற்ற பரங்கிரிச்சண்
முகன்றாட் கேநி
சம்பதிகண் டணைபதுதி காசைவெள்ளை யாண்டிசொலிச்
சமர்ப்பித் தானால்

உ

முருகன் துணை

## ஆசிரியம்

காருற்ற தென்பரங் குன்றமதி னடமிடுங்
கருணையா னந்த வடிவே
கங்காத ரன்செவியி லோங்கார பிரணவங்
கற்பித்த தேவர் முதலே
காரணம தானபரி பூரணக்ரு பாகார
கடல்வண்ண னருமை மருகா
கமலவய னைச்சிறையில் வைத்தவன் வினைசெய்த
கமழ்பழநி முருகவேளே
கதிபெருகு பொதிகைவரை யதிலுறையு முனியரசு
கருதுமெஞ் ஞான குருவே

கயலனைய விழிரசிக வனவளிதை மனமருவு
கனபுனித திவ்ய வரதா
கண்டனம் பேசிமத மேசிவரு சமணரைக்
கழுமுனையி லிட்ட குமரா
கண்ணுயி ரம்பெற்ற வமரர்கோ னதுகொடிய
கலியகற் றியதெய் வமே (1)

சீருற்ற நின்பதந் தெண்டனிட் டேழையேன்
செப்புவிண் ணப்ப மதுகேள்
சேனைகுல திலகன்குத் தாலலிங் கத்தருமன்
செய்தவப் பேற்றி னாலே
செனித்தவய வங்களிற் குறைவின்றி யாயுளுஞ்
செவ்விதின் வாய்ந்து மற்றும்
செந்தமிழ்க் கல்வியிற் றேரிய ரெனுந்தனைத்
தேடிவந் தேய்த்தேன்
சிங்கார மாகவள ருங்கிரி வலம்வந்து
சிந்தையுறு துயர மெல்லாம்
செப்பியுங் கேளா திருப்பதென் னேயுனது
சித்தமிள காத தென்னே
சிரமாக நின்றந்தை மார்க்கண்ட னைச்சிரஞ்
சீவியாக் கிடவில் லையோ (2)

ஏருற்ற பன்னிரு புயத்தனை தெந்தினஞ்
செய்தென்னை யேய்ப்ப தழகோ
எளியோர்க் கிரங்குமுரு கேசனென் றுன்னைப்பே
யெவ்வுலகு மோத விலையோ
எண்டிசையு மண்டபகி ரண்டமுநி றைதினரு
ளில்லாம னிலைநிற் குமோ

இடரூற்ற சீரனோடு மருணகிரி மாப்பழ
மிவர்க்குதவி செய்ய விலையோ
என்மீதி லையையோ விந்தவா தாகுமோ
வேசிடற் கிடமி தன்றோ
எப்பிழை யிருந்தாலு நின்மதலை யல்லவோ
விஃதுநீ யறியா ததோ
இதுவென்ன கலியுகக் கொடுமையோ வுனையன்றி
யின்னமொரு தெய்வ முளதோ
ஈராறு செவிபடைத் தூந்தமிய னுரைகடமை
யெட்டுணையு மேற்கா ததேன் (3)

மேரூற்ற பரிதாவி மார்களி பதின்மூன்று
வெள்ளியின் றேதி வாரம்
வினைப்பயன தாய்வெள்ளை யாண்டியெனு நாயேனை
மிகுசுரங் காயல் ஜன்னி
மெலிவுகை காலசதி துளியமுத முட்கொளா
விதமனத் துவேஷ மிருமல்
மேதினியி லிவையெலாம் வந்துபீ டித்ததிக
வேதனைப டுத்துவ தனால்
வேல்கொண் டெரிந்துமுன் னாழ்விதிப் படியெனினும்
விலக்கிநீ டாயுள் செல்வம்
வேண்டிய வரந்தந்து தொண்டனெனை ரக்ஷிக்க
வேளையிது நல்லவே ளையே
வெல்லுந் திருப்புகழி னருமையது கேட்டுமகிழ்
மிளிர்தோகை பயில்வா கனு
விஞ்சைமுனி வோர்தொழு திறைஞ்சவரு ளோசொரியும்
வேலாயு தக் கடவுளே (4)

(*)

இவை

போடி நாயக்கனூர் வித்வான் பிரம்மஸ்ரீ K. பாலசுப்ரம
ண்ய பாரதியவர்களின் பிரதமமாணவரும்
ஷேயூர் உ. மீராங்கன்னிராவுத்தரின் பௌத்திரருமா
ன வித்வான்

# H. கான்முகம்மதுராவுத்தரியற்றியவை

பொன்றங்குச் சிதமலரான் றோர்நமசி வாயவெனப்
போற்று நிற்ப
மன்றங்குச் சிதமலரா வுரியொடுகூத் தியற்றானூர்
மைந்தன் வேட்டு
குன்றங்குச் சிதமலரா கறங்குமுடி பிறங்குவள்ளிக்
கூட்டை நாடி
யன்றங்குச் சிதமலராங் கரங்கொடுகி ழவன்றொழிலு
மாற்றிச் சேர்ந்த

நாகரக மாசரசப் பான்கிரிக்கு மரன்பரிக்கு
நற்று டன்மை
பாகரக மாசரசப் பொற்பதக்கு நற்றுதிக
ளாக்கி யிட்டான்
பூகரக மாசரசக் காயெனவிர் காசைவளர்
புலவன் கல்விப்
போகரக மாசரச தாயவனுர் வீழவிடும்
பொன்றுச் சைவன்

மாகனக மலைக்குமரி வண்ணுடற்று நெஞ்சத்தான்
மாசு தீர்ந்த

கோகனக மலைக்குமரி யானைமுகப் பொன்னிடமே
கொள்ளு மார்பன்
போகனக மலைக்குமரி மகர்புலநாவு றைவுற்ற
மூவா மூவ
நாகனக மலைக்குமரி தானவர்க்கு நலன்வெள்ளை
யாண்டி மாலே.

உ
முருகன் துணை

## ஆசிரியம்

வாரிவளை தருமவனி மீதிலகு பலஜீவ
வர்க்கத்து ளுயர்மா னிட
வடிவுபெற் றலைகின்ற மதியிலா நிர்மூட
மாந்தர்முன் னூழின் படி.
மானுபோ கத்திலுள மெனவுணர மாட்டாது
மாதுன்ப மெய்து காலை
மந்தரவா திகளிடம் போய்ச்சொல்லி னவர்கள்கொடு
மாரணத் தொழிலி னாலே
வைப்புமுறை யேவல்வஞ் சனைபில்லி சூனிய
மகாபிரம ராக்ஷத முனி
மாடனுக் காரமிகு காளிபேவை களினால்
வருத்தமுண் டான தென்று
மாடொடு கிடாய்பன்றி சேவல்பலி யிட்டே
மயானத்தில் பூசை செய்தால்
வாதனை யெலாந்தீர்த்து வைக்கலா மென்றவீண்
வாய்மதம் பேசுவார் பின்

கூரிடுஞ் சோதிஷ ரிடத்துரைத் தானவக்
கோள்கணிலை மாறி நின்ற
கோசர பலத்தினு லங்கார கன்சூர்யன்
குருமந்த னிவர்க ளெல்லாம்
கொடியரா யஷ்டஜென் மந்துவா தசராசி
குடிகொண்ட தாலும் பொலாக்
குற்றமுந் தூர்த்தான வதிபர்திசை புத்தியுங்
கூடிய ததற்கு நேராய்
குடிகேடு செய்தவரு கின்றததது திரநற்
குருமணிக் கலன்வத் திரம்
கோவுமுத லானதா னங்கள்யா வும்வேத
குலவிப்பி ரர்க்க ளித்துக்
குறைவின்றி யோர்மண்ட லஞ்சமா ராதனைகள்
கோரிநன் சேமுடித் தால்
குவலயத் திந்தக் குடும்பத்தி லேசுகங்
கூடிவரு மென்பர் மற்றுங்
காரிய மிகுத்தபண் டிதரிடத் தேசொலின்
கைநாம் பொடுகண் குறி
கவ னுறு முகக்குறியு நோக்கியே சகலமுங்
கரைகண்ட முனிவர் போலே
கதியான வாதபித் தஞ்சிலேற் பனமிவைகள்
கருதுநிலை தப்பி யொன்றிற்
கலந்தொன் று பேதிக்க தென்றுமத னுன் மிகக்
காங்கையொடு கால்கை யுளைவு
கண்ணெரிவு வன்னிமந் தங்கண்ட தென்றுமே
கழறியங் குள்ள சமயம்
கண்டுகுறி யுஞ்சொலித் தங்கபஸ் பந்துய்ய
காந்தசெந் தூரம் புனுங்

கணிக்கிரத மொடுசெந்த னத்தைல வகைசெயக்
கனகமொரு நூறு வாங்கிக்
கணமான பெரியோர்க ளுன்முறையை யறியாது
காலங் கடத்தி வருவார்

ஊரில்வரு பேயாட்டு வோர்களுக் குறைசெய்யி
னுளருவார் பித்தரே போல்
ஒன்றேனு நிசமென்று நம்புதற் கிலைசித்தி
யொருபோது மாவ திலையால்
ஓதுசார் வரிமகர ரவியிருப தாந்தெய்தி
யோங்குபுகர் வார புஙரில்
உயர்சேனை குலவெள்ளை யாண்டியெனு நாயினே
னுற்றவினை நீங்க நின்பால்
ஓம்சரஹ ணபவவென் றுன்தா றெழுத்தையே
யுச்சரித் திடுவ தல்லால்
ஒருமந்தி ரத்தையு மருந்தையும் விரும்பிடே
னுறவினர்க ளிஷ்டர் கட்கும்
உரைப்பனிம் மந்திரங் கிருபைவைத் தாளுவா
யொப்பற்ற திவ்ய வடிவே
உம்பர்தொழு தம்பிரா னெப்பிரா னுனைசெந்
தூரில் வளர் முருகேசனே

வாழி வானகம் வையமும் வாழியே
வாழி மங்கையர் மக்களும் வாழியே
வாழி யாங்கிலர் மன்னரும் வாழியே
வாழி யிந்நூல் வகுத்தோனும் வாழியே